உ

சிவமயம்.

# சைவாநுட்டான அகவல்.

திருவாரூர்

ஞானப்பிரகாச பட்டாரகர்

அருளிச்செய்தது.

இது

எட்டயாபுரம் சமஸ்தான வித்வான்

திருமயிலை, வி. சுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

சிவமயம்.

# சைவாநுட்டான அகவல்.

சீர்பெறு மனாதிச் சிவாகமப் படியே
நேர்பெற நித்திய நியமம் புரிவோர்
கதிரவ னெழுமுன் கடிகையைந் தென்ன
மதிபெற வெழுந்து மகேசனை நினைந்து
துகளறு சௌச சுத்தி புரிந்தபின்
றகைமைசேர் தந்த தாவனஞ் செய்தே
போந்துநன் னதிமுதற் புனல்களி னாடித்
தோய்ந்துமுன் காய்ந்த துகிலினை யுடுத்து
மூவகைத் தத்துவ முறைதனின் மூக்கா
லாவது புரிந்திட் டாசம னத்தையும்
அகரஞ் சுத்திசெய் தந்திர மதனா
லிதயங் கொடுதொடு மிடங்களுந் தொட்டு
வைத்தவெண் ணீற்றின் மந்திரம் பதினொன்
றத்தந் தன்னா லபிமந் திரித்தபின்
பெருவிர லணிவிரற் பிடித்தவெண் ணீற்றாற்
சிரமுதற் பரிசனஞ் செய்தத் திரத்தா
லாசா ரத்தினோ டைந்திடஞ் சிரமுத
லீசா னாதிகொண் டிட்டுநீ றடைவினில்
அத்தகு மற்றை யங்க மெங்கணுஞ்
சத்தியோ சாதந் தனாநீ றணிந்தபின்
கரமிசை நீற்றைக் கழுவிய புனலின்

முரணிலீசான முதலைந் தமைத்தபின்
சென்னியிற் றெளித்துச் சிவமந் திரத்தாற்
சொன்னவாசயனந் தொடுமிடம் புரிந்தே
மகிழ்ந்திடச் செய்வது மானத நானம்
நிகழ்ந்திட வேகர நியாசஞ் செயும்படி
யத்திரந் தன்னா லங்கை துடைத்துத்
சத்திமந் திரத்தாற் றகைபெறக் கூட்டித்
திருவுறு சிவாதனஞ் சிவமூர்த்தியினும்
பெருவிர லிரண்டையும் பிணிக்கவுள் வைத்து
மூன்று மீசான முதலைந் தினையும்
ஐந்திடம் பெருவிர லாதியா யமைத்தே
யங்கையில் வளைத்த வங்குட் டங்கொடு
திகழ்ந்திட வித்தியா தேகமு நிசித்தே
வகைதெரி நேத்திர மந்திர மதனா
லகமுற நடுவிர லாறையும் வளைத்தே
யுறுபெரு விரலா லுள்ளங் கைகளின்
மருவுறு மூல மந்திர நிசித்துச்
சிறுவிரன் முதலாய் செறிந்தநால் விரலின்
முறைதரு மிதய முதனியா சம்பணி
யத்திர மதனா லங்குட் டங்களின்
மெத்திய தர்ச்சனி விரல்களாற் றெறித்துக்
கவசமந் திரத்தாற் கைகளைச் சுற்றி
யவமின்மூலத்தா லமைந்திடக் கூட்டி
யிருகர நியாச மியற்றிய பின்னர்
நெருங்கிய வங்க நியாசஞ் செயும்படி
செறிதரு சிவாசனஞ் சிவமூர்த்தியினா
னெறிதரு யார்பினி னியாசஞ் செய்தே
முந்திய சிரமுதன் முழுந்தா ளளவா

மைந்திலீசான மாதியைந் தமைத்தே
திருந்தரு வித்தியா தேகமேந் திரமிவை
இருந்தாறு மார்பினுங் கண்ணிறு மமைத்தே
யறிந்திடு மூலத் தணிவிரல் பெருவிரல்
செறிந்திட மார்பினிற் செய்து நியாச
மான்றிடு மிதய மாதிமந் திரங்கண்
மூன்றுமத் தலங்கண் மூன்றினுங் கொடுத்தே
தவராறு புயங்களிற் றர்ச்சனி யதனாற்
கவசமந் திரங்கொடு கவசமு மமைத்தே
ஓங்கணி விரலி னுள்ளங் கைகளி
லாங்குற வத்திர மதுகொடு நிசித்துத்
தக்கைத் தலங்கொடு தாளத் திரயமுந்
திக்குபந் தனமுஞ் செய்தத் திரத்தா
லாய்ந்திடு கவசத் தவகுண் டனமும்
வாய்ந்தமூலத்தான் மகாமுத்திரையும்
அங்க நியாசமு மடைவினிற் செய்தபின்
பொங்கிய மார்ச்சனம் புரிந்திடு மாறு
வாட்டமில் பதினொரு மந்திர மதனா
லீட்டிய பிராணா யாம மியற்றி
யாங்குறு விந்துவி னமுதிக யத்தால்
வாங்கியே புனலின் வைத்துமூ லத்தாற்
சிறந்தவத் திரத்தாற் றிக்குபந் தனமு
மறந்தரு கவசத் தவகுண் டனமுஞ்
சித்திர மான தேனுமுத் திரைமகா
முத்திரை மூலத் தானு முடித்துக்
கலைமகள் கமலை கௌரியிங் கவரைத்
தலைமையுஞ் சந்தியுந் தனித்தனி நினைந்தே

வரமிகு பதினொரு மந்திரத் தப்புனல்
சிரமிசைக் கும்பமுந் திரையாற் றெளித்தே
யாசற மீளவு மப்படி னென்றான்
மாசறு புனலை வலக்கையில் வாங்கி
யகமுற விடக்கை யமைத்ததில் வீழ்புனல்
பகல்பதி னென்றாப் புரோகிதத் தருப்பி
னின்றமெய்ப் புனல்வலம் சேர்பெற வாங்கி
நன்றிகொ ளிடது நாசியி னிடத்தாற்
றன்றியுட் புகுந்து தாங்கிடத் தன்பான்
மன்னிய வல்வினை மைக்குளம் பெனவே
நாடிய வலது நாசிகை யாற்புறத்
தோடிவீழ்ந் தெனநினைந் துற்றவப் புனலைத்
திண்ணிய வச்சிரச் சிலையுரு வாக
வெண்ணிய வப்புறத் தெரியிடத் துய்த்தே
கருதுமா சமனங் கரநியா சத்தொடு
நிறைதரு மங்க நியாசமுஞ் செய்து
மன்னிய கவச மந்திர மதனாற்
றன்னைமெய்ப் புனலாற் றனைபெறச் சூழ்ந்து
சூரிய விடத்திற் சுத்தனை நினைந்தே
சீரிய காயத் திரியுடன் மூலந்
தற்பண மும்முறை தனித்தனி செய்தே
யற்புத ஜெபமீ ரைந்துசெய் தடைவி
லதிகமொவ் வொருக்கா லருக்கியங் கொடுத்தும்
பதினொரு மந்திரம் பகர்ந்து தர்ப்பித்துச்
சூரிய மந்திரந் துகளற முக்கால்
வாரியிற் றருப்பணம் வகைபெற வுதவி
மந்திரந் தேவர் வகைபெறு மிருடிக
ளாந்தமின் மனுக்க ளடைவுறு பூதர்க்கு,

தந்தைதாய் ஞாதி கடன்குரு விவர்க்கு
முந்திய தருப்பண முறைமுறை செய்தே
வேண்டிய மந்திரம் வேறுஞ் சிலபல
பூண்டிரு கருப்பணம் புரிந்து விதிப்படி
தங்குமா சமனந் தருகர நியாசமு

மங்கநி யாசமு மடைவினிற் செய்தபின்
மருவியே புனலின் வைத்திடு மமுதைப்
புருவ நடுவினிற் பொருந்திடக் கூட்டி
மூல மந்திர முறைபெறச் செபித்தே
சூலபாணி யனைத் தொழுதடி வணங்கி

நற்புகழ் கமலை ஞானப் பிரகாசன்
அற்புத மாகிய வாகமப்படியே
நயவன் புடனே நவிலும் விதிப்படி
நியமம் புரிவோர் நீடுவாழ் பவரே.

சைவாநுட்டான அகவல்
முற்றிற்று.

---

ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவடி வாழ்க.

LIBRARY